# கோயம்புத்தூர் வணிக வழக்குகள் நீதிமன்றம் (மாவட்ட நீதிபதி நிலை), கோயம்புத்தூர்

## COS.No. 39 of 2025

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 9ம் நாள் திங்கள்கிழமை 1969ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின் திரு.கி.ஹரிகரன், எம்.எல்., நீதிபதி, வணிக வழக்குகள் நீதிமன்றம், (மாவட்ட நீதிபதி நிலை), கோயம்புத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | PW1-V.Arunkumar | கிராமம்: | |
| த.பெ. | Velusamy | வேலை: | |
| வயது | 43 | செல்போன் எண் | |

<u>முதல் விசாரணை:</u>

என் பெயர் V.அருண்குமார், வயது 43, த/பெ.வேலுசாமி. நான் தாக்கல் செய்துள்ள ஆணையுறுதி பத்திரத்தில் உள்ள வாசகங்கள் உண்மை என்றும், சரி என்றும் உறுதியளிக்கிறேன். அதை என் தரப்பு முதல் விசாரணையாக தாக்கல் செய்கிறேன். மேலும், என் தரப்பில் பின்வரும் ஆவணங்களை தாக்கல் செய்து குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1) 18.08.2025- Legal user Certificate in Trade Mark No.3893713 in Class 7 - Certified Copy

2) 23.06.2014- Acknowledgement by TamilNadu Government Department of Industries and Commerce - Photostat Copy

3) 27.02.2014- Form-B Certificate of registration of Commercial Tax Department - Photostat Copy

4) 27.02.2014– Form–D Certificate of registration of Commercial Tax Department – Photostat Copy

5) 20.09.2017– Registration Certificate issued under the GST Act – Online Copy

6) Aadhaar Card of the plaintiff – Photostat Copy

7) Brochure of the plaintiff – Original

8) Trademark certificate issued by the Government of India – Photostat Copy

9) 20.01.2019– Certificate of registration of Trademark issued under Trademarks Act by Government of India – Photostat Copy

10) Letter from TNAU Professor to defendant and its envelope – Photostat Copy

11) Brochure details of the defendant – Photostat Copy

12) Name board of the defendant – Photostat Copy

13) 07.07.2025– Legal notice sent by the plaintiff to the defendant – Office Copy

14) 29.07.2025– Reply Notice issued by the defendant – Office Copy

15) 12.01.2026– Reply given by the public information officer of Tamil Nadu Agricultural University to the Plaintiff – Original

16) 28.11.2025– Office copy of the letter sent to Tamil Nadu Agricultural University by the plaintiff along with the postal receipt

என் தரப்பில் மேற்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன். இவற்றில் நிரூபண வாக்குமூல பட்டியல் ஆவண எண் 6 தவிர இதர ஆவணங்கள் குறியீடு செய்ய பரிசீலிக்கப்பட்டு ஏற்கப்பட்டது. நிரூபண வாக்குமூல பட்டியல் ஆவணங்களில் 1 முதல் 16 ஆவணங்களில் ஆவண எண் 2, 3, 4 ஆகியவை அசல் ஆவணங்களுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்ய ஏற்கப்பட்டது. நிரூபண வாக்குமூல பட்டியல்

**ஆவண எண் 15 மற்றும் 16 ஆகியவை இ.ம.எண்.5/2026 ல் அனுமதிக்கப்பட்டு குறியீடு செய்ய ஏற்கப்பட்டது.**

**இவ்வாறாக நிரூபண வாக்குமூல பட்டியல் ஆவண எண் 1 முதல் 5 மற்றும் 7 முதல் 16 ஆகியவை முறையே வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்பட்டது.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

**உங்கள் நிறுவனத்தை 27.02.2014 தேதியில் தான் தொடங்கி உள்ளீர்கள் என்றால் சரிதான்.**

**27.02.2014 தேதிக்கு முன்னதாக உங்கள் நிறுவனம் தொடங்கப்பட்டதாக நீங்கள் ஆதாரங்கள் எதுவும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்று சொன்னால் சரிதான்.**

**9994699982 என்பது என்னுடைய கைபேசியின் எண்ணாகும்.**

**எங்கள் நிறுவனத்தில் நாங்கள் எந்திர தயாரிப்பு தொழில் செய்து வருகிறோம். எங்கள் நிறுவனத்தில் பின்வரும் சாதனங்களை நாங்கள் உற்பத்தி செய்கிறோம், Rubber band manufacturing machine, Steam Engineering Boiling machine, Hydraulic cylinder equipments, Ball milling machineries, screw pumps, tender coconut trimming machines, coconut dehusking machines, coconut cutting machines.**

**பிரதிவாதி தனது தொழிலை 2012 ஆம் ஆண்டு தொடங்கினார் என்பதை நிராகரிக்கும் வகையில் இந்நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான், தாக்கல் செய்யவில்லை.**

**நீங்கள் தொழில் தொடங்குவதற்கு முன்பாக சுமார் 14 மாதங்கள் 26 நாட்களுக்கு முன்னதாகவே பிரதிவாதி ARS Engineering Works என்ற**

பெயரில் தன் தொழிலை தொடங்கி விட்டார் என்று சொன்னால் சரிதான், தொடங்கிவிட்டார்.

நீங்கள் இவ்வழக்கில் பிரதிவாதி என்னென்ன எந்திரங்கள் வியாபாரம் செய்து வருகிறார் என்று ஆவணமாக Ex.A.10 தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான்.

Ex.A.10 பட்டியலில் கண்டுள்ள பிரதிவாதி நிறுவன வியாபார பொருட்கள் இரண்டிற்கும் ஒன்றோடு ஒன்று வேறுபட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல, ஒரு சில எந்திரங்கள் எங்களிடம் உள்ளவை பிரதிவாதியிடமும் இருக்கிறது.

பிரதிவாதி எந்திர உற்பத்தியாளர் இல்லை என்று சொன்னால் சரியல்ல, உற்பத்தியாளர் தான்.

பிரதிவாதி உற்பத்தியாளர் தான் என்பதை காட்டுவதற்கு நீதிமன்றத்தில் நீங்கள் எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான், தாக்கல் செய்யவில்லை.

Coconut dehusking machine பிரதிவாதி தயாரிக்கவில்லை, நீங்கள் தயாரித்து வரும் விவசாய சாதன பொருட்களைப் போன்ற பொருட்கள் எதையும் பிரதிவாதி தயாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல, தயார் செய்கிறார்.

Ex.A.9 ஆவணம் உங்களுக்கு எப்படி கிடைத்தது என்பதை வழக்கில் நீங்கள் கூறவில்லை என்று சொன்னால் பிரதிவாதி நிறுவன ஊழியர் யாரோ WhatsApp–இல் அனுப்பி உள்ளார்கள்.

இவ்வழக்கில் உங்களுக்கு இந்த ஆவணம் கிடைத்துள்ளது என்பதை மறைத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல, அந்த ஆவணத்தின் நகலை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன்.

Ex.A.9 ஆவணத்தின் அடிப்படையில் தான் பிரதிவாதி நீங்கள் சார்ந்த தொழிலை செய்து வருகிறார் என்று நீங்கள் கூறுகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல, ஒரு சில வாடிக்கையாளர்கள், விவசாயிகள் பிரதிவாதி நிறுவனத்திற்கு சென்று பொருட்கள் வாங்க செல்கிறார்கள், அங்கு சென்று பார்த்துவிட்டு மீண்டும் எங்களிடமே திரும்பி வந்து விடுகிறார்கள், பிரதிவாதி நிறுவனத்தைப் பற்றி விபரம் அறியாதவர்கள் அவர்களிடமே எங்கள் நிறுவனம் என்று நினைத்து பொருட்களை வாங்கிச் செல்கிறார்கள்.

பிரதிவாதி தரப்பில் உங்கள் வாடிக்கையாளர்களை கவர்ந்து கொண்டார்கள் என்று இவ்வழக்கில் ஆவணங்கள், ஆதாரங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை, நோட்டீஸ் கொடுத்துள்ளேன்.

நீங்கள் கொடுத்ததாக சொல்லும் நோட்டீசை இவ்வழக்கில் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான், தாக்கல் செய்யவில்லை.

உங்கள் நிறுவனம் என்று நினைத்து பிரதிவாதி நிறுவனத்திற்கு சென்று பொருட்களை வாங்கிவிட்டதாக வாடிக்கையாளர்கள் யாரும் உங்களிடம் ஒரு புகார் அளித்து அந்த புகார் நகலை நீதிமன்றத்தில் ஆவணமாக நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான், தாக்கல் செய்யவில்லை.

பிரதிவாதியிடம் வியாபாரம் தொடர்பாக மற்றும் வியாபார பெயர் தொடர்பாக குழப்பம் ஏற்படுகிறது என்று எழுத்து பூர்வமாக அவருக்கு அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரி, கொடுக்கவில்லை, நேரில் சென்று கேட்டேன்.

பிரதிவாதியிடம் பிரதிவாதி நிறுவன பெயருக்கும், என்னுடைய நிறுவன பெயருக்கும் இடையே குழப்பம் ஏற்படுகிறது என்று பிரதிவாதியை நீங்கள் நேரில் சென்று சந்தித்து எப்போதும் கூறியதில்லை என்று சொன்னால் சரியல்ல.

பிரதிவாதி நிறுவன வியாபாரத்தினால் உங்கள் நிறுவனத்திற்கு வியாபாரத்தில் நஷ்டம் ஏற்படுகிறது என்று தெரிவித்துள்ளீர்கள், அவ்வாறு உங்கள் நிறுவனத்தில் வியாபாரத்தில் நஷ்டம் ஏற்படுகிறது என்பதை காட்டுவதற்கு இவ்வழக்கில் கணக்குகளோ, ஆதாரங்களோ, ஆவணங்களோ சமர்ப்பிக்கவில்லை என்று சொன்னால் கொடுத்துள்ளேன்.

நீங்கள் வியாபாரத்தில் உங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டது என்று கணக்குகள் என்று நீங்கள் குறிப்பிட்டுள்ளது நிரூபண வாக்குமூலம் பத்தி மூன்றில் குறிப்பிட்டுள்ளவைதான் என்று சொன்னால் சரிதான்.

கடந்த 2018 ஆம் ஆண்டு முதல் தற்போது உள்ள ஆண்டு வரை நீங்கள் கணக்குகளை கொடுத்துள்ளீர்கள், அந்த கணக்குகளின் அடிப்படையில் கடந்த 2018 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை உங்கள் நிறுவனத்தின் வர்த்தகம் கூடிக் கொண்டே தான் இருந்திருக்கிறதே தவிர குறைந்ததாக எந்த ஆண்டிலும் இருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல, கடைசியாக எங்கள் நிறுவன வர்த்தகமாக ரூ.2,85,87,935/– ஆக உள்ளது, இதை விட கூடுதலாக எங்கள் நிறுவனத்திற்கு வர்த்தகம் ஏற்பட வாய்ப்பு இருந்திருக்கிறது.

பிரதிவாதியின் நிறுவனத்தினுடைய பெயர் இருப்பதின் காரணமாக உங்கள் நிறுவனத்தின் வர்த்தகம் கூடுதலாகவில்லை என்றும், குறைந்ததாகவும் நீங்கள் கூறுவது ஏற்புடையது அல்ல, உங்களுடைய

நிறுவன செயல்பாட்டினால் தான் குறைந்துள்ளதே தவிர பிரதிவாதி எந்த விதத்திலும் உங்கள் நிறுவன வர்த்தகம் குறைந்ததற்கு காரணமாக மாட்டார் என்று சொன்னால் சரியல்ல.

ஒரு வியாபாரத்தில் ஒரு தொழில் அதிகரிப்பதும், குறைந்திருப்பதும் பல்வேறு காரணங்களினால் ஏற்படக்கூடிய ஒன்று, இது சாதாரணமானது என்று சொன்னால் சரியல்ல.

2012 ஆம் ஆண்டு பிரதிவாதி தனது நிறுவனத்தை தொடங்கி 2014 ஆம் ஆண்டு நீங்கள் உங்கள் நிறுவனத்தை தொடங்கியுள்ளீர்கள், மேலும் பிரதிவாதிக்கும் உங்களுக்கும் கடந்த 2016 – 2017 ஆம் ஆண்டுகளில் இருந்தே அறிமுகம் இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல, அறிமுகம் இல்லை.

India Mart வர்த்தக தளத்தில் கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் எங்களுடைய வணிக பொருட்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

பிரதிவாதியும் ARS Engineering Works என்ற பெயரில் தன்னுடைய நிறுவனத்தை India Mart உள்ளிட்ட வர்த்தக தளங்களில் பதிவு செய்து வைத்துள்ளதால் ARS என்று தேடினாலே பிரதிவாதி நிறுவன பெயரும் வலைதளத்தில் பார்க்க முடியும் என்றும், தற்போது வழக்கிற்காக பிரதிவாதி நிறுவனத்தை உங்களுக்கு தெரியாது என்று கூறுகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

பிரதிவாதி நிறுவன வர்த்தக பெயர் காரணங்களுக்காக உங்களுடைய நிறுவன வர்த்தகம் பாதிக்கப்பட்டது என்பதை காட்டுவதற்கு இவ்வழக்கில் நீங்கள் ஆதாரம் எதையும் சமர்ப்பிக்கவில்லை என்று சொன்னால் இல்லை.

பிரதிவாதி நீங்கள் விற்பனை செய்வதுபோன்ற வர்த்தக பொருள்களையே அவரும் விற்பனை செய்கிறார் என்பதை காட்டுவதற்காக பிரதிவாதி நிறுவனத்தினுடைய ரசீதுகளோ அல்லது இன்வாய்ஸ்களோ நீங்கள் இவ்வழக்கில் ஆதாரமாக தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சில வாடிக்கையாளர்கள் என்னிடம் வந்து கூறியிருக்கிறார்கள், ஆனால் ரசீதுகளை நான் தாக்கல் செய்யவில்லை, நான் அரசு கொடுத்த ஒப்பந்த புள்ளியின் அடிப்படையிலான விலை ஆதாரங்களைக் கொடுத்துள்ளேன்.

நீங்கள் நீதிமன்றத்தில் உங்களுடைய வாடிக்கையாளர்கள் பிரதிவாதியின் நிறுவன பெயர் காரணமாக குழப்பம் அடைந்தார்கள் என்றோ அல்லது தவறாக வழிநடத்தப்பட்டார்கள் என்றோ ஆதாரங்கள் சமர்ப்பிக்காத நிலையில் நீங்கள் கோரும் உறுத்துக்கட்டளை பரிகாரம் உங்களுக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

Ex.A.9 ஆவணம் உங்களுக்கு WhatsApp–ல் கிடைக்கப்பெற்ற பின்னர் நீங்கள் பிரதிவாதியை அழைத்து கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல, அலைபேசியில் அழைத்து கேட்டேன், அப்போது அவர் என்னிடம் தவறாக எனது நண்பருக்கு வந்துவிட்டது என்றும் உடனடியாக எனக்கு அனுப்பி வைத்து விட்டதாகவும் அதற்காக sorry என்று கூறி உடனே அலைபேசியை துண்டித்து விட்டார்.

இவ்வாறு பிரதிவாதிக்கு ஒரு கடிதம் தவறாக வந்துவிட்டது என்று அவர் உங்களுக்கு WhatsApp–ல் அனுப்பி வைத்தார் என்று கூறியுள்ளீர்கள், அதற்கு பின்னிட்டு நீங்கள் மேல் நடவடிக்கை ஏதேனும் எடுத்தீர்களா என்றால் பிரதிவாதியிடம் சென்று நேரடியாக கேட்டேன்,

**அவர் பதில் ஏதும் கொடுக்காததால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துவிட்டேன்.**

**WhatsApp–ல் பிரதிவாதி உங்களுக்கு ஆவணத்தை அனுப்பிய பிறகு சுமார் ஒன்றரை ஆண்டுகள் கழித்து தான் நீங்கள் பிரதிவாதிக்கு அறிவிப்பு கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் பிரதிவாதி ஏதேனும் பதில் அளிப்பாரா என்று நான் காத்திருந்தேன் அதன் பின்னிட்டு தான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.**

**ஒருவேளை பிரதிவாதி நீங்கள் கூறுவது போல் அவர் நீங்கள் தயாரிக்கும் எந்திரங்கள் போல அவரும் தயாரித்திருந்தால் அவர் உண்மையில் அந்த ஒப்பந்த புள்ளியின் அடிப்படையில் வரப்பெற்ற கடிதத்தினை அவரே அந்த எந்திரங்களை அனுப்பி வைத்திருக்க முடியும், அவர் உங்களுக்கு அனுப்பி வைத்திருக்க வேண்டிய தேவையே எழுந்திருக்காது, இருப்பினும் பிரதிவாதி அதை உங்களிடம் அனுப்பி வைத்துவிட்டார் என்று சொன்னால் உண்மையில் அரசு தரப்பில் இருந்து கிடைக்கப்பெற்ற Tender பிரதிவாதி நிறுவனத்திற்கு வந்த Tender தான், அதை தான் பிரதிவாதி நிறுவனம் எங்களுக்கு அனுப்பி வைத்து விட்டார்கள்.**

**Ex.A.9 கடிதத்தை பிரதிவாதி உங்களுக்கு WhatsApp–ல் அனுப்பி வைக்காவிட்டால் உங்களுக்கு இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கான தேவையே இருந்திருக்காது என்று சொன்னால் சரியல்ல, இது அல்லாமல் என்னுடைய வாடிக்கையாளர்களும் பலர் என்னிடம் தெரிவித்திருக்கிறார்கள்.**

**வாடிக்கையாளர்கள் யாரையும் நீங்கள் சாட்சியாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான், ஆனால் என்னிடம் கூறினார்கள்.**

நீங்கள் இந்நீதிமன்றத்தில் நீதிமன்ற ஆணையரை நியமிப்பதற்காக ஒரு மனு ஒன்றினை தாக்கல் செய்திருந்தீர்கள், அந்த மனுவினை அனுமதிப்பதற்கு பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை, இருப்பினும் அந்த மனுவினை நீங்கள் not press செய்து விட்டீர்கள், அவ்வாறு நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டால் நீங்கள் தயாரிக்கும் எந்திரங்களும் பிரதிவாதி வர்த்தகம் செய்து வரும் எந்திரங்களும் வேறு வேறானவை என்பது தெரிந்துவிடும் என்பதற்காக தான் நீங்கள் நீதிமன்ற ஆணையர் மனுவினை திரும்ப பெற்றுக்கொண்டீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

2012 ஆம் ஆண்டு பிரதிவாதி தனது தொழிலை ARS Engineering Works என்ற நிறுவன பெயரில் தொடங்கிவிட்டார், அதன் பின்னிட்டு 2014 ஆம் ஆண்டு தான் நீங்கள் உங்கள் நிறுவன பெயரில் தொழில் தொடங்கியுள்ளீர்கள், உங்களுக்கு முன்னதாகவே பிரதிவாதி தனது நிறுவனத்தை ARS Engineering Works என்ற பெயரில் தொடங்கிவிட்ட காரணத்தினால் இவ்வழக்கில் நீங்கள் கோரும் பரிகாரம் உங்களுக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

இவ்வழக்கு தள்ளுபடி ஆகத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை நிறைவுற்றது.

Sd/–K.Hariharan

Judge,
Commercial Court
(District Judge Cadre),
Coimbatore.